மகிந்தவின் கழுத்தை இறுக்கும் போரும் தீர்வும்

இதயச்சந்திரன்
(ஒரு பேப்பருக்காக)

சர்வதேச அரங்கில், தமது ஒருதலைபட்ச போர்நிறுத்த ஒப்பந்த முறிப்பினால், இராஜ தந்திர பின்னடைவை எதிர்கொள்ளும் மகிந்த அரசு, அதை சரி செய்து நிமிர்த்த, தீர்வுத்திட்ட நாடகத்தை முன்னெடுத்துள்ளது.

23ஆம் திகதி வெளியிடப்படவிருந்த அரசியல் தீர்வு குறித்து விவாதிப்பதற்கு, 22ஆம் திகதி யன்று, சம்பந்தப்பட்ட அரசியல் கட்சித் தலைவர்களை மகிந்தர் சந்தித்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைத் தவிர ஏனைய தமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள், திஸ்ஸ விதாரண சமர்ப்பித்த திட்டத்தை முழுமையாக ஏற்றுக் கொள்ள மறுத்தனர்.

போதுமான அதிகாரங்கள் இதில் உள்ளடக்கப்படவில்லையென மலையகத் தமிழ்க் கட்சிகளும், மகிந்த சிந்தனையின் அடிப்படையில் அமையாமல், அதிகப்படியான அதிகாரங்களை இத்திட்டம் வழங்குகிறதென ஜே.வி.பி, ஹெலஉறுமய போன்ற பேரினவாதக் கட்சிகளும், பிளவுண்டு நின்றதால், முடிவொன்றும் எட்டப்படாமல் பின் போடப்பட்டது மகிந்தரின் தீர்வு நாடகம்.

ஏற்கனவே சட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள 13வது திருத்த இணைப்பினை, புதிதாக அறிமுகப்படுத்துவது போன்று முன்வைக்க வேண்டிய அவசியமில்லையென்பதே மலையகக் கட்சிகளின் வாதமாகவிருந்தது.

விதாரணயின் திட்டத்தில், காவல்துறை, காணி உரிமை, நெடுஞ்சாலைப் பராமரிப்பு பற்றிய முக்கியமான விடயங்கள் உள்ளடக்கப்படவில்லையென்பதால் மலையக கட்சிகள் எதிர்த்தன.

இந்த அடிப்படை விடயங்கள் கூட இணைக்கப்படாமல், விதாரண முன் வைத்த திட்டமானது, மிதமிஞ்சிய அதிகாரங்களை தமிழ் மக்களுக்கு வழங்கப் போவதாக பேரின வாதிகள் நிராகரித்த விடயம், மாவட்ட சபையினையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லையென்பதை உணர்த்துகிறது.

வடக்கிற்கு இடைக்கால சபையும், கிழக்கிற்கு உள்ளூராட்சி சபைகளை அமைப்பதற்கும் அரசியல் முலாமொன்று மகிந்தருக்கு தேவைப்பட்டது.

அதை நிறைவேற்றுவதற்கு 13வது இணைப்புச் சட்டமென்று தலைப்பிட்டு, மகிந்த சிந்தனையை உட்புகுத்துவதே அரசின் திட்டம்.

இதை உணராமல், வட - கிழக்கு இணைந்த தாயகக் கோட்பாட்டை, சர்வகட்சி கூட்டத்தில் கலந்து கொள்ளும் எந்தவொரு தமிழ்க் கட்சிகளும் வலியுறுத்தவில்லையென்பதே மிகவும் சோகமாகக் கருதப்படுகிறது.

ஏனெனில் அடிப்படைப் பிரச்சினை பற்றி பேசாமல், மகிந்த சிந்தனைக்கு ஒத்து ஊதும் பணியே அவர்களின் அரசியல் கடமையாகிவிட்டது.

இந்தியாவால் மட்டுமே தமிழ் மக்களின் பிரச்சனையைத் தீர்க்க முடியுமெனக் கூறி, சிறீலங்கா அரசிற்கு ஆயுதங்கள் வழங்குவதை நியாயப்படுத்தும் தமிழ்த் தலைவர்கள், மகிந்தரின் 13வது புதிய சட்டத்தை உயர்த்திப் பிடிப்பதன் தாற்பரியம் புரிகிறது.

அதிகாரப் பரவலாக்கத்தையும், நிர்வாகப் பரவலாக்கத்தையும் ஒன்றாகப் போட்டு குழப்பும் அரசியல் உத்தியினையே, நீண்டகாலமாக சிங்களம் பிரயோகிக்கின்றது.

ஆயினும் இந்த தலைவர்களுக்கு விளங்காத விடயமொன்று உண்டு.

அதாவது தமிழர் தாயகக் கோட்பாட்டை ஏற்றுக் கொள்ளாமல், ஒற்றையாட்சி அரசியல் யாப்பினை மாற்றாமல், முன்வைக்கப்படும் எத்தகைய அற்புதமான தீர்வுப் பொதிகளும், நிர்வாகப் பரவலாக்கம் என்கிற வரையறைக்குள் மட்டுமே அடக்கப்படும்.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஊடாக வரையப்பட்ட தீர்வுகள் யாவும், மாறாநிலை கொண்ட ஒற்றையாட்சி அரசியலமைப்பில், பின்னிணைப்புகளாகவே சேர்ந்துள்ளன.

அவையாவும் தமிழர் தலைமையால் அங்கீகரிக்கப்பட்ட தீர்வல்ல என்பதையும் நினைவிற் கொள்ளல் வேண்டும்.

ஏனெனில் அதிகாரப் பரவலாக்கத்தையும், நிர்வாகப் பரவலாக்கத்தையும் ஒன்றாகப் போட்டு குழப்பும் அரசியல் உத்தியினையே, நீண்டகாலமாக சிங்களம் பிரயோகிக்கின்றது.

அதேவேளை சர்வகட்சி (அரசசார்பு) பிரதிநிதிகளால் உருவாக்கப்படும் தீர்வுத்திட்டமென அழுத்திக் கூறியவாறு, நடைமுறையிலுள்ள அரசியல் அமைப்பு வரையறைக்குள் இருந்து, நிர்வாகப் பரவலாக்கத்தை மேற் கொள்ளும் நிகழ்ச்சி நிரலே மகிந்தரின் சூழ்ச்சித் திட்டமாகும்.

மகிந்தரின் சர்வகட்சி கூட்டுக்குள், தமிழ்க் கூட்டமைப்பு, யு.என்.பி, ஜே.வி.பி போன்ற பலம் வாய்ந்த கட்சிகள் உள்ளடக்கப்படவில்லை என்பதையும் கவனிக்க வேண்டும்.

சர்வகட்சிப் பிரதிநிதிகளின் தீர்வுத்திட்டமென தொடர்ச்சியாக அழுத்திக் கூறுவதன் சூட்சுமத்தை சர்வதேச நாடுகளைத் தமது தீர்வுப் பொறிக்குள் கொண்டு வருவதற்கு, மகிந்தர் வகுக்கும் அரசியல் வலைப்பின்னலின் அடிப்படையில் புரியப்படலாம்.

ஏற்கனவே 13வது இணைப்புச் சட்ட அடிப்படையில் அரசியல் தீர்வுத் திட்டத்தை செயற்படுத்தப் போகிறேனெனக் கூறுவதனூடாக, இந்தியாவை தனது பொறிக்குள் வீழ்த்தியுள்ளது சிங்களம்.

அதேவேளை, விடுதலைப் புலிகளுடன் எதுவித பேச்சுவார்த்தையும் இனிக் கிடையாது, அவர்களை போர் மூலம் அழித்தொழிப்பதே தமது முதற் பணியெனக் கூறுவதன் மூலம், சர்வதேச நாடுகளின் பங்காற்றலை அகற்றியுள்ளார் மகிந்தர்.

புலிகளுடன் பேசுதல், ஐ.நா. மனித உரிமைக் கண்காணிப்பகத்தை அமைத்தல் போன்ற இணைத் தலைமைக் கூட்டத்தின் நெருக்கு வாரங்கள் இனிமேல் கருத்தில் கொள்ளப்பட மாட்டாதென்பதே அரசின் அவசரத் தீர்வுத் திட்ட நகர்வுகள் கூறும் செய்தி.

விடுதலைப் புலிகள் மீது, அரச உத்தியோகபூர்வத் தடை விதித்தால், இணைத் தலைமை நாடுகளின் பங்களிப்பு நிச்சயம் பாதிப்படையும்.

அதற்கான பயணத்தையே மகிந்தர் தற்போது ஆரம்பித்துள்ளார். ஒற்றையாட்சியை, ஏற்றுக் கொள்ளும் தமிழ்க் குழுக்களுக்கே இத் தீர்வுவெனவும், விடுதலைப் புலிகளுக் கல்ல இதுவெனவும், அழுத்தம் திருத்தமாகக் கூறுவதிலிருந்து இப்பயண நோக்கத்தை புரிந்து கொள்ளலாம்.

போர் மூலம், விடுதலைப் புலிகளை அழித்தலே, தமிழ் மக்களுக்கு தாம் வழங்கப் போகும் தீர்வென்று உறுதிப்படக் கூறுகிறது சிங்களம்.

'புலித்தடை'யை நிறைவேற்றினால், சர்வதேசத்தின் எதிர்வினைச் செயற்பாடுகள் எவ்வாறு வெளிப்படுமென்பது குறித்து, சிறிது குழப்பத்துள் ஆழ்ந்துள்ள அரசு.

அதாவது ஒப்பந்தக் கிழிப்போடு சீற்ற மடைந்துள்ள இணைத் தலைமை நாடுகள், புலிகளைத் தடைசெய்யும் அடுத்த கட்ட நகர்வினை தாம் மேற் கொள்ளும்போது, புலம் பெயர் நாடுகளில் அமுலில் உள்ள புலிகள் மீதான தடையை அகற்றும் சூழ்நிலை உருவாகலாமென எண்ணுகிறது.

ஆகவே சர்வதேசம் விரும்பும் 'பேச்சுவார்த்தை' என்கிற அழுத்தத்திலிருந்து தப்பிப்பதற்கு, தீர்வுத்திட்டக் காய் நகர்த்தலை இராஜதந்திர உத்தியாக பயன்படுத்த முனைகிறது சிங்களம்.

அதேவேளை விடுதலைப் புலிகள் மீது விதிக்கும் தடையானது, இணைத்தலைமை நாடுகள் பிரயோகிக்கும் அழுத்தங்களிலிருந்து புலிகள் தப்பித்து விடுவார்களென்பதால், போரையும், தீர்வையும் சமாந்தரமாகக் கையாள்வதை மகிந்தர் விரும்புகிறார்.

மகிந்தர் தடைபோடும்வரை, முன்னேற முயலும் இராணுவத்தைப் பின்தள்ளும் சமரை மட்டுமே, விடுதலைப்புலிகள் மேற்கொள் வார்களென சர்வதேசம் எடைபோடுகிறது.

ஆனாலும் தெற்கில் விரியும் தொடர் தாக்குதல்களை எதிர்கொள்ளும் அரசு, வன்னி முற்றுகைக்கு பயன்படுத்தும் படை வளத்தை, நாடெங்கும் பரவலாக்கி, யுத்தத்தில் தோல்வியுற வாய்ப்புண்டென்றும் அவர்கள் மத்தியில் கருத்து நிலையொன்று ஏற்பட்டுள்ளது.

இந்தியாவால் மட்டுமே தமிழ் மக்களின் பிரச்சனையைத் தீர்க்க முடியுமெனக் கூறி, சிறீலங்கா அரசிற்கு ஆயுதங்கள் வழங்குவதை நியாயப்படுத்தும் தமிழ்த் தலைவர்கள், மகிந்தரின் 13வது புதிய சட்டத்தை உயர்த்திப் பிடிப்பதன் தாற்பரியம் புரிகிறது.

போரிற்கு ஆதரவு வழங்கும் பேரினவாதக் கட்சிகள், தீர்வுத் திட்டத்தை குழப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டவாறு, ஐ.நா. சபைக்கு எதிரான கடும் போக்கினை வெளிப் படுத்துவதால், இந்தியாவைத் தவிர ஏனைய பிராந்திய நலன் பேணும் வல்லரசுகள், சிறீலங்கா விவகாரத்திலிருந்து தனிமைப் படுத்தப்படும் வாய்ப்புக்கள் அதிகரிக்கின்றன.

தற்போது ஆயுதம் வழங்கும் ஒரு வழிப் பாதையை மட்டுமே, மேற்குலகிற்கு திறந்து வைத்துள்ளது சிங்களம்.

அப்பாதையூடாக, மனித உரிமைக் கண்காணிப்பகத்தையோ அல்லது ஹான்சன் பௌவரையோ உள் நுழைய விடாமல் தடுக்க, ஜே.வி.பியைப் பயன்படுத்துகிறது அரசு.

அதேவேளை, மகிந்தரின் அரைகுறைத் தீர்வுப் பாதையில் ஜே.வி.பி விதைக்கும் தடைக் கற்கள், நிலைமையை மேலும் சிக்கலாக்குகிறது.

விடுதலைப் புலிகள் மீதான தடை இறுதி யுத்தத்திற்கு இடையூறாகவுள்ள தடையரணை உடைக்குமென்பதால், அதனை நிறை வேற்றுமாறு ஜே.வி.பி. வலியுறுத்துகிறது.

ஆகவே தடைவிதிக்கு முன்பாக, சர்வதேசத்தை தம்பக்கம் அணிதிரட்ட முயல்கிறார் மகிந்தர்.

தடை விதிப்பதனூடாக சர்வதேசத்தைத் தனிமைப் படுத்த விரும்புகிறது ஜே.வி.பி.

60வது சுதந்திர தின நாள் வரை இந்த கயிறு இழுத்தல் போட்டி தீவிரமாக முன்னெடுக்கப்படும்.

ஆயினும் விடுதலைப் புலிகளின் பாதை, வேறு திசை நோக்கித் திரும்புமென கணிப்பிடலாம்.

Ohm Sri Vanadhurga Sakthi Jothidam
ஓம் ஸ்ரீ வனதுர்க்கா சக்தி ஜோதிடம்
குருஜி கிருஸ்ண பண்டித் சாஸ்திரி

இந்தியாவில் ஸ்ரிகாகுளம் மாவட்டம் அருகில் உள்ள அதி பயங்கர வனத்தில் மூன்று குருமார்களிடத்தில் 5 வயது முதல் கானகத்தில் கடும் விரதம் இருந்து கடும் பயிற்சி செய்து 10 வருடங்கள் ஜோதிடம், வாஸ்து, குரு மந்திரங்கள் மூலம் பில்லி சூனிய நிவரத்தி ஆகியவைகள் கற்று இந்தியாவில் பல பிரபலங்களுக்கு ஜோதிடம் பார்த்து அவர்கள் பெரிய பதவியை அடைந்துள்ளார்கள். பல நாடுகளுக்குச் சென்று வியாபார நோக்கு இல்லாமல் சேவை மனப்பான்மையுடன் மக்களுடைய பிரச்சனை களைத் தூர்த்து வருகின்றார்.

உத்தியோக பிரச்சினை, குடும்ப உள் விவகாரம், நிதி நிலை விவகாரம், கோர்ட் விவகாரம், எதிரிகள் தொல்லை, விசா பிரச்சினை, வியாபார முன்னேற்ற மின்னை, பில்லி சூனியம், மற்றும் எல்லாவித பிரச்சனைகளையும், மூலிகை மருந்து மூலமும், ஆயுர்வேத மருந்து மூலமும், டாக்டர்கள் குணப் படுத்த முடியாத வியாதிகளையும், மனப்போராட்டங் களைப் போக்கச் செய்வார்.

இவர் பல நாடுகளுக்குச் சுற்றி இலண்டனுக்கு வந்துள்ளார். சில காலமே இங்கு வசிப்பார். அதற்குள் நீங்கள் அவரைத் தொடர்பு கொண்டு உங்கள் பிரச்சனைகளைக் கூறிப் பரிகாரம் தேடுங்கள்.

திருமண பொருத்தம் பார்த்துக் குறிப்பு கொடுக்கப்படும்.

Mob: **07506 126 801**
07918 808 772

Opening Hours: 9-30 am to 7-30 pm
One Stop Bargain Shop
218 High Street, East Ham, E6 2JA
(Near East Ham, UG Station)